## வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி - 2015

---

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் (“வங்கி”) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (‘‘சபை’’) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) 01 இன் 15 ஆம் பிரிவு – நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பித்தலின் பிரகாரம் நிதிக்கூற்றுகளை நியாயமாகச் சமர்ப்பிப்பதை அடைவதற்கு தேவையான போது மேலதிக வெளிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு வேண்டப்பட்டுள்ள போதிலும் வங்கியுடன் போதிய சான்றினை கொண்டிராததன் காரணமாக வெளிப்படுத்தல்கள் எதுவும் இல்லாமல் 2015 மற்றும் 2014 ஆண்டுகளிற்காக முறையே மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்ட முன்னைய ஆண்டு சீராக்கங்களில் ரூபா 68,537 மற்றும் ரூபா 27,745,091 தொகையான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எவ்ஆர்எஸ்) 7 – நிதிக்கருவிகள், வெளிப்படுத்தல்களின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியில் கடன் ஆபத்து, சந்தை ஆபத்து, திரவத்தன்மை ஆபத்து போன்றன நிறுவனத்தால் வெளிப்படுத்தப்படுதல் மற்றும் அவை எவ்வாறு முகாமை செய்யப்பட்டிருந்தன என்பதற்கு நிதிக்கருவிகளிலிருந்து எழும் ஆபத்தின் தன்மை மற்றும் பரப்பை வங்கி வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஏஎஸ்) 40- முதலீட்டு ஆதனத்தினால் வேண்டப்பட்டவாறு பெறுமதியிடப்படுகின்ற முதலீட்டு ஆதனத்தின் அமைவிடம் மற்றும் வகைப்படுத்தலில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உரிய தொழில்சார் தகமை மற்றும் அண்மைக்கால அனுபவம் என்பவற்றை கொண்டிருந்த சுயாதீனமான மதிப்பீட்டாளரொருவரால் மதிப்பீடு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டு ஆதனத்தின் நியாயமான பெறுமதிக்கான பரப்பை வங்கி வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஈ) வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்கள் பேரேட்டுடன் இணங்கியிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்று மற்றும் பேரேட்டிற்கு எடுக்கப்பட்ட தொகைகளிற்கிடையில் ரூபா 30,916,133 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டிருந்தது.

(உ) 06 கடன் மீதிகளில் உள்ள ஏனைய கடன் வசதிகள் தொடர்பில் வழங்கப்பட்ட பொதுப் பேரேடு மற்றும் கடன் பட்டியலிற்கிடையே அவதானிக்கப்பட்ட இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் ரூபா 4,606,059 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்த அதேநேரம் 03 கடன்கள் ரூபா 1,462,929 ஆல் பேரேட்டில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) குத்தகை மற்றும் வாடகை கொள்வனவுகள் தொடர்பில் வழங்கப்பட்ட பேரேடு மற்றும் கடன் பட்டியல்களிற்கிடையே ரூபா 6,225,150 இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது

(எ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கிளைகளுக்கிடையேயான நடைமுறைக் கணக்குகள் மற்றும் தலைமை அலுவலக நடைமுறை கணக்குகள் என்பவற்றுக்கிடையே ரூபா 10,454,038 இணக்கம் செய்யப்படாத தேறிய வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு (ஏடிபீ இற்கான நுண்நிதிக் கடன்) செலுத்த வேண்டிய கடன் திறைசேரியால் உறுதிப்படுத்தப்பட்ட மீதியுடன் ரூபா 2,611,023 ஆல் வேறுபட்டிருந்ததுடன் இந்த வேறுபாடு செல்லுபடியான காரணமெதுவுமின்றி மூலதனத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஐ) பதிவேட்டிலுள்ள ரூபா 99,428,472 தொகையான எதிர்மறை கடன் மீதிகள் போதுமானதும் பொருத்தமானதுமான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதமையால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஒ) ரூபா 2,784,406 தொகையான ஏனைய செலுத்த வேண்டிய மீதியின் சரியான தன்மை, இருக்கும் தன்மை, பூரணத்தன்மை மற்றும் பெறுமதி கணிப்பீட்டை சரிபார்ப்பதற்கான ஆவணச்சான்று கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஓ) அனைத்து உரிமம் பெற்ற விசேட வங்கிகளும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட 2014 திசெம்பர் 23 ஆம் திகதிய 02/17/402/0073/002 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 சனவரி 01 தொடக்கம் ரூபா 5 பில்லியன் ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாட்டை முன்னேற்றுவதற்கு வேண்டப்பட்டுள்ள போதிலும் அத்திகதியிலுள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வங்கியின் மொத்த மூலதனம் ரூபா 4,343,236,531 இலேயே காணப்பட்டது.

(ஔ) மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட பொதுப் பேரேட்டிற்கும் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புப் பட்டியல்களிற்குமிடையே ரூபா 625,761 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(க) நுண்நிதிக் கடன் வசதிகள் தொடர்பாக வழங்கப்பட்ட பட்டியலிற்கும் பொதுப் பேரேட்டிற்கும் இடையே ரூபா 670,430 இணக்கம் செய்யப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் சாத்தியமான தாக்கங்களினைத் தவிர்த்து வங்கியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(i) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ii) மேற்படி முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களினால் நான் திருப்திப்படுவதற்கு அவசியமானதென தீர்மானிக்கப்பட்ட அத்தகைய சீராக்கங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வங்கியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

– கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் வங்கியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் (ஈஎஸ்சீ) அதிகாரச்சட்டத்தின் 2(3) ஆம் பிரிவு | வட்டி, கழிவுகள், பங்கிலாபம், பரிமாற்றம், சேவைக் கட்டணங்கள், தரகுச் செயற்பாடு மீதான தரகுகள் அல்லது அதன் வணிகம் தொடர்பில் நிறுவனத்தால் பெறப்பட்ட ஏதாவது ஏனைய வருமானம் அத்தகைய நிறுவனத்தின் பகுதி விற்பனையாக கருதப்படும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது கட்டணம் மற்றும் தரகு வருமானத்தை ஏற்படுத்துவதில் உழைக்கப்பட்ட ரூபா 3,261,068 தொகை ஈஎஸ்சீ ஐ கணிப்பிடும் போது விற்பனைப் பொறுப்பாக கருதப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 116(1) ஆம் பிரிவு | வங்கியின் வட்டி வருமானத்தை பதிவு செய்வதற்காக முறையான பதிவேடொன்றை வங்கி பேணியிருக்கவில்லை. |
| (இ) | 2014 யூன் 23 இன் 1868/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 43,042,135 ஏனைய தனிப்பட்ட செலவினங்களை கணக்கிற்கு எடுக்காமல் பெறுமதி சேர் வரி (வற்) மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) நோக்கங்களிற்காக மொத்தப் பெறுமதிச் சேர்க்கை கணிப்பீட்டில் ரூபா 55,005,674 கூட்டுத்தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் மாத்திரம் சம்பளங்களாக கருதப்பட்டிருந்தது. ஆகையால், மீளாய்வாண்டிற்கான நிதிச் சேவைகள் மீதான வற் மற்றும் என்பீரீ ஏறத்தாழ ரூபா 5,595,478 கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 234,854,912 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 432,282,566 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 199,427,654 அல்லது 85 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்கள் மீதான நட்டக்கழிவுக் கட்டணங்கள் ரூபா 242,753,222 ஆல் குறைவடைந்தமை நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

## 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் மூலதன போதுமை விகிதம் (தட்டு 1) 2014 ஆம் ஆண்டில் 94 சதவீதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டில் 65 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இது இலங்கை மத்திய வங்கியால் வேண்டப்பட்ட 10 சதவீதமான வீதத்தை விட உயர்வாக இருந்தது.

(ஆ) வங்கியின் சராசரிச் சொத்துக்கள் மீதான திரும்பல் 2014 ஆம் ஆண்டில் 3.32 சதவீதத்திலிருந்து 2015 ஆம் ஆண்டில் 5.29 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.

## 3.3 வங்கிக்கு எதிராக அல்லது வங்கியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 49 தீர்க்கப்படாத நீதிமன்ற வழக்குகள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 6 வழக்குகள் வங்கிக்கெதிராக வெளிநபர்களால் ரூபா 172,182,000 கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் 43 வழக்குகள் வங்கியால் வெளிநபர்களிற்கெதிராக ரூபா 869,103,253 கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 வங்கியின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் அமைப்பு அகவிதியின் பிரகாரம், நிதிசார் உதவி மற்றும் சேவைகள் ஏற்பாட்டின் மூலம் செயற்திறனான சுயதொழில் சிறு கைத்தொழில்கள் மற்றும் கிராமிய வேலைகள் உள்ளடங்கலான செயற்பாட்டுப் பரப்பின் ஊடாக வறுமைக்காக நிலைத்திருக்கக்கூடிய வருமானத்தை உருவாக்கும் சந்தர்ப்பங்கள் மற்றும் உயர் வாழ்க்கைத்தரம் என்பவற்றை இனங்காணுதல், அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல், ஊக்கமளித்தல் மற்றும் துணைபுரிதல் என்பன வங்கியின் பிரதான நோக்கமாகும். அதற்கிணங்க, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு துறைக்கான நிதிசார் உதவி வழங்கப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **துறை** | **வழங்கப்பட்ட கடன் தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| விவசாயம் மற்றும் மீன்பிடி | 962,241,694 |
| உற்பத்தி | 467,236,843 |
| சுற்றுலா | 20,935,707 |
| போக்குவரத்து | 88,603,000 |
| நிர்மாணம் | 586,952,449 |
| வியாபாரம் | 516,752,420 |
| புதிய பொருளாதாரம் | 4,709,352 |
| ஏனையவை | 1,522,643,776 |
| **மொத்தம்** | **4,170,075,241** |

வங்கியானது நோக்கங்களை வடிவமைப்பதுடன் இணங்கும் வகையில் சிறு கைத்தொழில்களிற்கான கடன்களின் மொத்தக் கலவையில் ரூபா 1,062,287,025 அல்லது 25 சதவீத கடன்களை மாத்திரம் வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், இது குறைந்தளவு திருப்தி மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பிறேமுக சேமிப்புக்கள் மற்றும் அபிவிருத்தி வங்கியின் (பிஎஸ்டிபீ) பொறுப்புக்களைத் தீர்த்தல்**

2009 இல் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட பிஎஸ்டிபீ இன் கடன்கொடுத்தோர் மற்றும் வைப்பாளர்களின் கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கான திட்டத்தின் பிரகாரம், பிஎஸ்டிபீ மூலம் தவணை கடந்த கடன்கொடுத்தோர் மற்றும் வைப்பாளர்களிற்கான மிகுதியாகவுள்ள அனைத்துப் பொறுப்புக்களும் வங்கியால் செலுத்தப்படும். அதற்கிணங்க, வங்கியானது மீளாய்வாண்டின் போது அத்தகைய கடன்கொடுத்தோர் மற்றும் வைப்பாளர்களிற்கு ரூபா 66,268,341 தொகையை செலுத்தியதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2017 திசெம்பரிற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய எஞ்சியுள்ள மீதி ரூபா 2,131,001,482 ஆக இருந்தது.

## 4.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டிற்கான ரூபா 676,168,543 தொகையான மொத்த வட்டி வருமானத்தில் ரூபா 449,667,164 தொகை அல்லது முதலீடுகள் மீதான வட்டியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 67 சதவீதத்திற்கு மேற்பட்டதும் 33 சதவீதத்திற்கு குறைவானதும் நிதி உதவி மற்றும் சேவை ஏற்பாடாகவுள்ள வங்கியின் பிரதான செயற்பாடுகளிலிருந்து உழைக்கப்பட்டிருந்தது.

## 4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 04 இல் நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் (ஈஜிஎம்) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், ஈஜீஎம் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் பொதுத் திறைசேரிக்கு வங்கியின் பங்குதாரர்களின் அனைத்து அங்கத்துவப் பங்குகளையும் மாற்றுவதற்கான முன்மொழிவுத் திட்டம் 2017 யூன் 30 வரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வங்கியின் கூட்டங்களில் எடுக்கப்பட்ட பின்வரும் தீர்மானங்கள் கீழே காட்டப்பட்டவாறு அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கூட்டக்குறிப்பு திகதி | தீர்மானத்தின் விபரங்கள் | பொறுப்பான உத்தியோகத்தர் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை |
|---|---|---|---|
| 07.02.2015<br>26.06.2015<br>28.08.2015 | மாத்தறை மற்றும் அனுராதபுரம் தவிர்ந்த அனைத்து கிளைகளிற்கான முறையான அறவீட்டுத் திட்டங்களை தயாரித்து அனுப்புதல் | அனைத்து முகாமையாளர்கள் | தயாரிக்கப்படவில்லை |
| 28.08.2015 | குத்தகை வணிகத்திற்காக இக்மன்.எல்கே (ikman.lk) ஊடாக அடுத்த 2 அல்லது 3 மாதங்களின் போது புதிய வணிகத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல் | ஜீஎம்/ஏஜீஎம் | அறிமுகப்படுத்தப்படவில்லை |
| 28.08.2015 | காப்புறுதிப் பூட்கையுடன் பிள்ளைகளிற்கான புதிய கணக்கை அறிமுகப்படுத்துதல் (2 அல்லது 3 மாதங்களின் போது 5,000 கணக்குகள் இலக்கிடப்பட்டது) | ஜீஎம்/ஏஜீஎம் | ஆரம்பிக்கப்படவில்லை |
| 28.08.2015 | வங்கியின் வைப்புக்களை அதிகரிப்பதற்கான வணிகத் திட்டத்தை தயாரித்தல் | திறைசேரிப் பிரிவு | ஆரம்பிக்கப்படவில்லை |

## 4.4 இடர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இடர் முகாமைத்துவக் கட்டமைப்பு சபையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 7 பதவியணியினருடனான இடர் முகாமைத்துவப் பிரிவின் பதவியணி பரிந்துரைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 3 பதவியணியினருடன் மாத்திரம் பிரிவு செயற்படுவதுடன் கடன் இடர், செயற்பாட்டு இடர் மற்றும் சந்தைப்படுத்தல் இடர் உத்தியோகத்தர்கள் போன்ற முக்கிய பதவிகள் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து வெற்றிடமாக இருந்தது.

(ஆ) வங்கியின் இடர் முகாமைத்துவ கொள்கையின் 4.13.1 ஆம் பந்தியின் பிரகாரம் கடன் கலவையின் தரம் தொடர்பில் சபைக்கு சுயாதீனமாக அறிக்கையிட வேண்டிய கடன் மீளாய்வு உத்தியோகத்தர் (Loan Review Officer) பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பதவி 2015 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகவிருந்தது.

(இ) சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (பீஐஆர்எம்சீ) வங்கியின் இடர் முகாமைத்துவ கொள்கையின் 2.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் முதல் காலாண்டில் கூடியிருக்கவில்லை.

(ஈ) வங்கியின் இடர் முகாமைத்துவ கொள்கையின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம், சபை உப குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் என்பன இடர் முகாமைத்துவத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் இடர் விடயங்களை ஒருங்கிணைப்பதற்குத் துணைபுரிந்து பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் பீஐஆர்எம்சீ கூட்டக் குறிப்புக்களின் பிரகாரம் கணக்காய்வுக் குழு, சொத்து மற்றும் பொறுப்புக் குழு (ஏஎல்சீஓ), முதலீட்டுக் குழு, முகாமைத்துவக் குழு, ஐரீ வழிகாட்டல் குழு மற்றும் அறவீட்டுக் குழு என்பவற்றின் இடர் விடயங்கள் பீஆர்ஜஎம்சீ ஆல் அலட்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**4.5 செயற்பாடற்ற கடன்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நபர்கள், ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்கள் புனரமைப்பு அதிகாரசபையின் (ஆர்ஈபிபிஜஏ) கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள கடன்கள் ரூபா 59,952,654 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 59,447,928 அல்லது 99 சதவீதம் அத் திகதியிலுள்ளவாறு செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 149 ஆர்ஈபிபிஜஏ கடன்கள் தொடர்பில் மன்னார் கிளையின் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்களின் அவதானிப்புக்களை அடிப்படையாகக்கொண்டு 2014 திசெம்பர் 11 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் சபை கடன் குழுவானது (பீசீசீ) ஆர்ஈபிபிஜஏ கடன்களை மீளப் பட்டியலிடுவதற்கு அங்கீகரித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் அல்லது அதற்கு முன்னர் வங்கியின் பிரயோக முறைமைக்கு மீளப் பட்டியலிடப்பட்ட தகவல்களை உள்ளடக்குவதற்கு அறிவுறுத்தியிருந்த போதிலும் வங்கியின் பிரயோக முறைமையில் மீளப் பட்டியலிடல் தெரிவு காணப்படாததால் அத்தகைய கடன்களை மீளப் பட்டியலிடுவதற்கு சாதகமான நடவடிக்கை எதையும் வங்கி எடுத்திருக்கவில்லை.

(இ) ஹோப் (Hope) நுண்நிதிச் சேவைகள் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனி

நுண்நிதிக் கடன் திட்டத்தின் கீழ் மூன்று கடன் வசதிகள் (மீள்நிதியிடல் திட்டம், என்ஈசீடிஈபி திட்டம் மற்றும் இயலளவைக் கட்டியெழுப்பும் திட்டம்) ஹோப் நுண்நிதிச் சேவைகள் (உத்தரவாதத்தால்) வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு (எச்ஓபிஈ) வழங்கப்பட்டது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை கடன் மீதி ரூபா 39,373,610 தொகையாக இருந்ததுடன் பின்னர் இது செயற்பாடற்ற கடனாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 மார்ச்சிலிருந்து தவணை கடந்ததன் காரணமாக 2012 செப்தெம்பர் 24 இல் சபையால் கடன் மீளப் பட்டியலிடல் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் கடன் பணவளிப்பிற்கான அங்கீகாரம் அடுத்த பணவளிப்பிற்கு முன்னர் களப் பரீட்சிப்பின் மூலம் சரிபார்த்தலிற்கு உட்பட்டு 2012 ஒக்தோபர் 03 இல் வங்கியின் செயற்பாட்டுப் பணிப்பாளரால் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 2,675,000 மற்றும் ரூபா 1,950,000 தொகையான இரண்டு பணவளிப்புக்கள் அத்தகைய சரிபார்த்தல்களை மேற்கொள்ளாது முறையே 2012 ஒக்தோபர் 22 மற்றும் 2012 நவம்பர் 02 இல் விடுவிக்கப்பட்டிருந்தன.

(ii) 2012 நவம்பர் 24 இல் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பின் போது எச்ஓபிஈ இற்கு வழங்கப்பட்ட நிதியின் பகுதியொன்று இறுதிக் கடன்பட்டோரிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணமும் வங்கிக்கு அனுப்பப்படாமல் எச்ஓபிஈ ஆல் நிறுத்திவைத்திருக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிடப்பட்ட பணத்தை சேகரிப்பதற்கு வங்கியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சரிபார்ப்பதற்கு கணக்காய்விற்கு ஆதாரப்படுத்தப்பட்ட சான்றெதுவும் காணப்படவில்லை. மேலும், களப் பரீட்சிப்பின் அவதானிப்புக்களை புறக்கணித்து 2012 திசெம்பர் 04 இல் ரூபா 2,000,000 தொகையான ஏனைய பணவளிப்பை விடுவித்தமை கணக்காய்விற்கு கேள்விக்குரியதாக இருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 பணிப்பாளர்களின் நியமனம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) உரிமம் பெற்ற விசேட வங்கிகளிற்கான கூட்டிணைந்த ஆளுகை மீதான வங்கி அதிகாரச்சட்ட நெறிப்படுத்தலின் 3(2) ஆம் பிரிவின் பிரகாரம், பணிப்பாளர் சபை ஆகக்குறைந்தது 07 உறுப்பினர்களையும் 13 உறுப்பினர்களிற்கு மேற்படாமலும் கொண்டிருக்க வேண்டிய போதிலும் இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) வங்கி மேற்பார்வை திணைக்களத்தின் 2015 நவம்பர் 13 ஆம் திகதிய 02/19/0319/0001/002 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வங்கியின் பணிப்பாளர்களாக ஏழு (07) நபர்களை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு மறுத்திருந்தது.

(ஆ) மேலும், வங்கியின் புதிய பணிப்பாளர் சபையை நியமிப்பதற்கு திறைசேரிச் செயலாளரை உடனடியாக வேண்டுமாறு முகாமைத்துவத்திற்கு வலுவாக அறிவுரை வழங்கியிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 வரையிலும் குறிப்பிடப்பட்ட விடயம் மீது முகாமைத்துவத்தால் சீர்செய்யும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருந்ததா என நியாயப்படுத்துவதற்கு கிடைக்கப்பெற்ற தகவலெதுவும் காணப்படவில்லை.

(இ) மேற்படி கடிதத்தின் பிரகாரம், வங்கியின் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்த இரண்டு (02) நபர்களின் பொருத்தப்பாடு மற்றும் முன்னுரிமையை மதிப்பிடுவதற்காக அவர்களின் சத்தியக்கடதாசிகள் மற்றும் வெளிப்படுத்தல்களை அனுப்புவதற்கு சீபீஎஸ்எல் கோரியிருந்த போதிலும் வங்கி இதனுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஈ) வங்கி அதிகாரச்சட்ட நெறிப்படுத்தல்களின் 3(1)(iii) ஆம் நெறிப்படுத்தலின் பிரகாரம், சபைக் கூட்டங்கள் சமூகமளிப்பதற்கு உரித்துள்ள பணிப்பாளர்களில் பெரும்பாண்மையான நபர்களின் உற்சாகமான பங்குபற்றுதலை சாதாரணமாக உள்ளடக்க வேண்டிய போதிலும் வங்கியின் 11 பணிப்பாளர்களில் 7 பணிப்பாளர்கள் தகுதியற்றிருந்ததுடன் 2 ஏனையவர்கள் சீபீஎஸ்எல் ஆல் பணிப்பாளர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் உரிமம் பெற்ற விசேட வங்கிகளிற்கான கூட்டிணைந்த ஆளுகை மீதான வங்கி அதிகாரச்சட்ட நெறிப்படுத்தலின் 3(2) மற்றும் 3(3) ஆம் வழிகாட்டல்களின் பிரகாரம், இது ஆகக் குறைந்த உறுப்பினர் எண்ணிக்கை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பணிப்பாளர்களின் பொருத்தப்பாடு மற்றும் முன்னுரிமை என்பவற்றுடன் இணங்கியுள்ளதா என தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

---

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்திக்கிணங்க 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 71/2015 ஆம் இலக்க சபைப் பதிதிரத்தின் மூலம் 2015 ஏப்ரல் 28 இல் காணப்படாத செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக பணிப்பாளர் சபை தமது அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 5.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீட்டுடன் தொடர்புடைய ஆண்டு ஆரம்பிப்பதற்கு கிட்டத்தட்ட 6 மாதங்களிற்கு முன்னர் பாதீடு தயாரித்தல் ஆரம்பிக்கப்பட வேண்டியதுடன் அதற்கிணங்க தொடர்வதற்கும் வரையறைகள் மற்றும் இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் அதன் தேவைகளை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு நடவடிக்கையையும் கைத்தொழில் மிக அவதானமாக மதிப்பிட வேண்டிய போதிலும் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டை தயாரித்தல் தொடர்பான சான்று அல்லது வேலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பாதிடப்பட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் பாதிடப்பட்ட மூலதனச் செலவினம் என்பன 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களிற்கான முறையான அங்கீகரித்தல் நடைமுறை வங்கியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடின்மையால் சுட்டிக்காட்டப்பட்ட எல்லை எதுவுமின்றி அனைத்து நாட்குறிப்புப் பதிவுகளின் அங்கீகாரமும் நிதி சிரேஷ்ட முகாமையாளரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | (ii) பிழையான பதிவுகள் கால அடிப்படையில் திருத்தப்பட்டிருக்காததுடன் திருத்தப்படாத பிழையான பதிவுகள் பதிவேட்டில் நீண்ட காலமாக அவதானிக்கப்பட்டன. மேலும், பழைய முறைமையிலிருந்து புதிய முறைமைக்கு மாற்றப்படும் தகவல்களில் அவதானிக்கப்பட்ட பிழைகள் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை திருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கைநூல்களை பராமரித்தல் | வங்கியின் செயற்பாட்டுக் கைநூல் தற்போதைய நிலைமையை பிரதிபலிப்பதற்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) கூட்டிணைந்த ஆளுகை | இணங்காத பரப்புக்கள் தொடர்பில் கூட்டிணைந்த ஆளுகையிலுள்ள நெறிப்படுத்தல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் என்பவற்றுடன் வங்கி இணங்க வேண்டியிருந்தது. |
| (ஈ) கடன் நிர்வாகம் | வினைத்திறனான அறவீட்டு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் செயற்பாடற்ற கடன்களிலிருந்து எழுகின்ற ஆபத்துக்களை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |